
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1204

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

64

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# பேச்சில் மட்டுமல்ல, கொள்கையிலும் கறார்!



ரகுமான்கான் மறைவுக்குப் பிறகு, அவருடைய மகன் சுபேர்கான், தன் தந்தை எழுதிய ஐந்து நூல்களைக் கழகத் தலைவரை வைத்து அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் வெளியிட்டார். ‘நியாயங்களின் பயணம்’, ‘மௌனமாய் உறங்கும் பனித்துளிகள்’, ‘உலகமறியா தாஜ்மஹால்கள்’, ‘பூ... பூக்கும் இலையுதிர் காலம்’, ‘வானம் பார்க்காத நட்சத்திரங்கள்’ என ஐந்து நூல்கள் மற்றும் அவரது சட்டமன்ற உரைகள் தொகுப்பான ‘இடி முழக்கம்’ ஆகியவை அன்றைய தினம் வெளியிடப்பட்டன. உண்மையில், ரகுமான் கானின் தாக்கம் கழகத் தொண்டர்கள் மத்தியில் எந்த அளவுக்கு வீரியமிக்கதாக இருந்தது என்பதை உணர்த்தியது அன்றைய நிகழ்ச்சி.

ரகுமான்கான் கம்பத்தில் பிறந்தவர் என்பதால், கம்பத்தில் இருந்து கழகத்தினர் வருகை தந்திருந்தனர். ராமநாதபுரத்தில் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்து பணியாற்றியவர் என்பதால், ராமநாதபுரத்தில் இருந்தும் கழகத்தினர் வருகை தந்திருந்தனர். அதேபோல, சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தவர் என்பதால், அங்கிருந்தும் தொண்டர்கள் வந்திருந்தனர்.

இதைத் தனது உரையில் குறிப்பிட்ட கழகத் தலைவர், தொகுதி மக்களிடத்தில் எந்தளவுக்கு அன்பை, பாசத்தைப் பெற்றிருந்தால், இப்படி அனைத்துப் பகுதிகளிலும் இருந்து இந்நிகழ்ச்சிக்குத் தொண்டர்கள் வந்திருப்பார்கள் என்று கூறி நெகிழ்ந்தார். ஏனெனில், அவர் ராம நாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பின ராகவும் இருந்தது வெவ்வேறு காலகட்டங்கள். அதுமட்டுமல்ல, மிக நீண்டகாலம் ஆகியிருந் தாலும்கூட, மக்கள் மறவாமல் அவர்மீது அன்பு கொண்டிருக்கிறார்கள் என்பதையும் வெளிப்படுத்தியது அந்த நிகழ்ச்சி.

“ரகுமான்கானின் பேச்சுக்கும் எழுத்துக்கும் ரசிகன் நான்! அவர் பேசுகின்ற கூட்டங்கள் என்றால், நான் விரும்பி பங்கேற்பதுண்டு. என்னைப் பொறுத்தவரைக்கும், அவர் ஒரு ஸ்டார்! ஸ்டார் பேச்சாளர். அவர் மறைவதற்கு சில நாட்களுக்கு முன்னால், கழக உயர்நிலைச் செயல்திட்டக் குழுவை ஆன்லைனில் நாம் நடத்தினோம். அந்தக் கூட்டம் முடிந்ததும் என்னிடம் வீடியோ காலில் பேசிய அவர், என்னுடைய உடல்நலத்தைப் பற்றி அக்கறையோடு கேட்டு, அதைக் கவனித்துக் கொள்ளச் சொன்னார். பதிலுக்கு நானும் அவருடைய உடல்நலனைப் பற்றி விசாரித்தேன். சிறுபான்மை சமுதாயத்துக்கு மட்டுமல்ல, தி.மு.க.வுக்கும் நாட்டுக்கும் அவர் தேவை என்று சொன்னேன். அவர் கண் கலங்கிவிட்டார். ஆனால், சில நாட்களிலேயே நம் எல்லோரையும் கண்கலங்க வைத்துவிட்டு அவர் மறைந்துவிட்டார்” என்று அவருடனான உருக்கமான அன்பையும் அப்போது வெளிப்படுத்தினார் கழகத் தலைவர்.

இணையமும் யூடியூபும் இல்லாத காலமாக அல்லாமல், இன்றைய தகவல் தொழில்நுட்ப வசதிகள், ஒருவேளை அந்தக் காலகட்டத்தில் இருந்திருந்தால், நிச்சயம் கழகத் தலைவர் கூறியதுபோல, அவர் பெரிய சூப்பர் ஸ்டாராகவே, அவரை அறியாத இன்றைய இளம் தலைமுறைக்கும் பதிவாகியிருப்பார். அ.தி.மு.க.வின் இரட்டை நிலைப்பாட்டைத் தோலுரிக்கும் விதமாக ஒருமுறை சட்டமன்றத்தில் பேசிய ரகுமான்கான், “அ.தி.மு.க.வின் சின்னமோ இரட்டை இலை; அதனால் இரட்டை நிலைப்பாடு” என்று தடாலடியாகக் கூற, ஆளுங்கட்சியாக இருந்த அ.தி.மு.க. தரப்பில் உடனடியாகப் பதில் சொல்லக்கூட முடியாமல் நிலைதடுமாறிப் போனார்கள். ‘இடி - மின்னல் - மழை’ என ஈட்டியாய்க் கேள்விக்கணைகளை ஏவிய ரகுமான்கான், சுப்பு, துரைமுருகன் ஆகியோர் சட்டமன்றத்தில் பேச முடியாத சூழல் உருவானபோது, மக்கள் மன்றத்தில் அவர்களைப் பேச அனுப்பினார் கலைஞர்.

தமிழ்நாடு முழுவதும் ஊர் ஊராகச் சென்று அவர்கள் பேசியபோது, எழுந்த ஆரவாரமும் வரவேற்பும் பிரமிக்கத்தக்கதாய் இருந்தது. தமிழ்நாடு முழுக்க கட்டுக்கடங்காத கூட்டம் கூடியது. சில ஊர்களில் இவர்கள் கூட்டங்களில் பேசச் சென்றபோது, அரங்கக் கூட்டமாக ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்தக் கூட்டங்களுக்கு மக்கள் பணம் கொடுத்து, டிக்கெட் வாங்கி அமர்ந்து பேச்சைக் கவனித்தார்கள். எப்படியாவது ரகுமான்கானைத் தனது கட்சியில் இணைத்துவிட வேண்டுமென்று எம்.ஜி.ஆர். எத்தனையோ முறை முயன்றார். தொடர்ந்து, 12 ஆண்டுக்காலம் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த தருவாயில் நாவலர் நெடுஞ்செழியன், கே.ஏ.மதியழகன் என முன்னோடிகள் சிலரே அணி மாறிவிட்ட சூழல் அது. ஆனால், அந்த நெருக்கடியான காலகட்டத்திலும் அணி மாறாத கொள்கை உறுதி படைத்தவராக, எம்.ஜி.ஆரின் முயற்சிகள் அனைத்தையும் தோல்வியாக்கி, கழகத்தோடு உறுதியாக நின்றவர் ரகுமான்கான்.

இரண்டு முறை ரகுமான்கான் வீட்டில் பெட்ரோல் குண்டு வீச்சு சம்பவங்கள் நடந்தன. கத்தியோடும் அரிவாளோடும் சிலர் சென்று, அவரை மிரட்டிப்பார்த்தார்கள். தன்மீது கத்தி வீசியவரைக் கையும் களவுமாக மடக்கிப்பிடித்த துணிச்சல்காரர் அவர். இந்த சம்பவத்தைக் கேள்விப்பட்டு, கலைஞரே நேரடியாக அவருடைய வீட்டுக்குச் சென்றார் என்பதும் வரலாறு.

### அரசே ஆடும்

இடி முழக்கமாய்ச் சீறிட்ட அவரது பேச்சு மட்டுமல்ல, கடந்த வாரம் கூறியதைப் போல ரகுமான்கானின் சுருள்முடி தோற்றமும் அந்தக் காலகட்டத்தில் ஈர்ப்பானது. சட்டமன்றத்திலோ, மக்கள் மன்றத்திலோ, சுருள்முடியை முகத்தின் முன்பாகத் தொங்கவிட்டு, அவர் பேசத் தொடங்கும்போது பேச்சை மட்டுமல்ல அந்த சுருள்முடியின் அழகையும் மக்கள் ரசித்துப் பார்ப்பார்கள். கலைஞரே ஒருமுறை அதைக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார். “சட்டப்பேரவையில் உன் உடலாட தலையாட தலையிலுள்ள சுருள் முடியாட, அக்காட்சி கண்டு ஆளும் அரசே ஆடியது” என்று பாராட்டினார் கலைஞர்.

எழுத்து, பேச்சு, சிந்தனை, செயல்பாடு என அனைத்திலுமே அரசியலை மட்டுமே கொண்டிருந்த கழகத்தின் சிறந்ததொரு உடன்பிறப்பு ரகுமான்கான். சட்டமன்றத்தில் கேள்விக்கணைகளால் எம்.ஜி.ஆர். அரசை நிலைகுலையவைத்த அதே வேளையில், தென்றலாகக் கவிதைகளையும் படைத்திருக் கிறார். பேச்சிலும் செயல்பாட்டிலும் வெகு கறாரானவர் என அவரோடு பழகிய கழகத்தின் மூத்த உடன்பிறப்புகளே சொல்லியிருக்கின்றனர். ஆனால், அவரது கறார் மனதுக்குள் ஹைக்கூக்களும் முளைத்திருக்கின்றன. அந்த ஹைக்கூக்களில் பல, காலம் கடந்த அரசியல் சூழலுக்கும் பொருந்தும் பொதுமைப்பண்பு கொண்டவை என்பதும் கவனிக்கத்தக்கது. அத்தகைய புகழுக்குரியவராக ரகுமான்கான் இருப்பதால்தான், மறைவுக்குப் பிறகும் கழகத்தினர் மனத்தில் இருந்து நீங்காமல் இன்றும் நிறைந்திருக்கிறார். அவரது சட்டமன்ற உரைகளும் எழுத்துகளும் அரசியல் களத்திற்கு வரும் இளையோருக்கும், கழக உடன்பிறப்பு களுக்கும் பாலபாடம். அந்தப் பாடத்தைப் படிப்போம் வரும் வாரங்களில்...

...நீளும்

> “எழுத்து, பேச்சு, சிந்தனை, செயல்பாடு என அனைத்திலுமே அரசியலை மட்டுமே கொண்டிருந்த கழகத்தின் சிறந்ததொரு உடன்பிறப்பு ரகுமான்கான்.”

## அதிர்ச்சியளிக்கும் தீர்ப்புகள்!



அயோத்தி தீர்ப்புக்குப் பிறகு, இந்தியாவில் பல மாநிலங்களில் மசூதிகளுக்கும் சிறுபான்மைச் சமூக வழிபாட்டுத் தலங்களுக்கும் உரிமை கோரத் தொடங்கியிருக்கின்றன இந்துத்துவா அமைப்புகள். தமிழ்நாட்டிலும் திருப்பரங் குன்றத்தில் சிக்கந்தர் தர்காவுக்குச் சொந்தமான இடத்தில், விளக்கு ஏற்ற வேண்டுமென்று சர்ச்சையைக் கிளப்பி, அதில் அரசியல் குளிர்காய முயன்றார்கள். ஆனால், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, அந்த சூழ்ச்சிகளை முறியடித்து, தமிழ்நாட்டின் மத நல்லிணக்கச் சூழலை உறுதிப்படுத்தினார்.

ஆனால், இந்தியா முழுவதும் பல மாநிலங்களில் இந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது, சங் பரிவார் அமைப்புகள். பெரும்பாலும், அவர்களுக்குச் சாதகமாகவே நீதிமன்றத் தீர்ப்புகளும் கிடைத்து வருகின்றன. குறிப்பாக, மத்தியப்பிரதேச மாநிலம் தார் பகுதியில், ‘மௌலானா கமாலுத்தீன் மசூதி’ 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. ஆனால், இந்த மசூதிக்கு 1950 முதலே வலதுசாரிகள் உரிமை கோரி வருகின்றனர். வாக்தேவி (சரஸ்வதி) கோயில் இது என்று வாதிட்டு வந்தனர். மத்தியப்பிரதேச உயர் நீதிமன்றத்தின் இந்தோர் அமர்வு, சில நாட்களுக்கு முன்பு இதுதொடர்பான வழக்கில் வழங்கிய தீர்ப்பில், இந்த இடம் வாக்தேவிக்குச் சொந்தமானது என்று தீர்ப்பளித்துள்ளது.

இதன்படி, இஸ்லாமியர்கள் மசூதிக்குள் சென்று வழிபட தடை விதிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், வலதுசாரி அமைப்புகள் மசூதிக்குள் வாக்தேவியின் படத்தை வைத்து, வழிபாட்டைத் தொடங்கியுள்ளனர். வாக்தேவி சிலை லண்டனில் இருப்பதாகவும், அதைக் கொண்டு வர மாநில அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்துள்ளது. இந்தியா சுதந்திரம் அடைந்த நாளான ஆகஸ்ட் 15, 1947 அன்று, எந்தவொரு வழிபாட்டுத் தலமும் எந்த மதத்தைச் சேர்ந்ததாக இருந்ததோ, அதே மதத்தன்மை எவ்வித மாற்றமும் இல்லாமல் தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும் என்று வழிபாட்டுத் தலங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், 1991 வலியுறுத்தும் நிலையில், அதை மீறி நீதிமன்றத் தீர்ப்புகள் வருவது அதிர்ச்சியை ஏற்படுத்திவருகிறது.

## ஃப்ளாஷ்பேக்



பெ.இராஜேந்திரன்



### தமிழ்நாடு அரசு விருந்தினர்களாக..!

2007-ஆம் ஆண்டு டிசம்பர் 10-ஆம் தேதி, ‘தமிழ்நாடு அரசு விருந்தினர்கள்’ என்கிற பெருமையுடன், மலேசியாவைச் சேர்ந்த 36 எழுத்தாளர்கள் தமிழ்நாட்டில் கால் பதித்தோம். “மாண்புமிகு முதல்வர் அவர்களின் சார்பில் வரவேற்கிறோம்” என்று கூறி, விமான நிலையத்தில் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர், தமிழ்நாடு செய்தித்துறை அதிகாரிகள். அடுத்த நாள், தலைமைச் செயலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்தோம். முனைவர் இராஜம் காளியப்பன் எழுதிய ‘மலேசியப் புதுக்கவிதை: தோற்றமும் வளர்ச்சியும்’ எனும் நூலை கலைஞர் அவர்கள் வெளியிட, பேராசிரியர் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். 2004-ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் நாங்கள் மேற்கொண்ட பயண அனுபவங்களைத் தொகுத்து, நான் எழுதிய ‘வேர்களை நோக்கி விழுதுகளின் பயணம்’ எனும் நூலை, கலைஞர் அவர்களிடம் வழங்கி வாழ்த்துப் பெற்றதும் மறக்கவியலா நினைவு.

- பெ.இராஜேந்திரன்,
தலைவர், அயலகத் தொடர்புக் குழு, மேனாள் தலைவர்,
மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### மீண்டும் மொழிப்போராட்டம்!

1986-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், மீண்டும் தமிழ்நாட்டில் இந்தித் திணிப்புக்கான முயற்சி நடைபெற்றது. ஒன்றிய அரசு அலுவலகங்களில் பணியாற்றுவோர் அனைவரும் இந்தியில்தான் கையெழுத்துப் போட வேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. அதற்கு எதிராக, மீண்டும் மொழிப்போரைத் தொடங்கியது தமிழ்நாடு. அந்த ஆண்டு நவம்பர் 17-ஆம் தேதி, தமிழ்நாடு முழுவதும் அரசியல் சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தை அறிவித்தது கழகம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900